1979 மார்ச் 15]

பாதுகாக்கமுடியும் என்ற காரணத்தால் இப்பொழுது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேற்கொண்டு இருக்கிற அணைகளைத் தகுந்த முறையிலே பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவரவர்களே, மேற்கொண்டு அரசு பரிசீலனை செய்யும்.

தென்ஞற்காடு மாவட்டத்தில் மரவள்ளி ஆலை

* வினா எண் 416—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம் மணிமுக்தா நீர்ப்பாசன திட்டப்பகுதியில் ஒரு மரவள்ளி ஆலை ஆரம்பிக்க அனுமதி கோரி மனு ஏதேனும் வந்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது ; (அ) ஆம். திரு. இளங்கோவன் என்பவர் மரவள்ளி ஆலை நிறுவ, மரவள்ளிக்கிழங்கு மாவு தயாரிக்க தொழில் வணிகத் துறையில் சிறு தொழிலாகப் பதிவு செய்ய விண்ணப்பித்து இருந்தார்.

(ஆ) தொழில் வணிகத்துறை அவருடைய நிறுவனத்தை சிறு தொழிலாக தற்காலிக முறையில் பதிவு செய்து சான்றிதழ் வழங்கியிருந்தது. அச்சான்றிதழ் 6-5-1978 உடன் காலாவதியாகி விட்டது. அதைத் தொழில் முனைவோர் புதுப்பிக்கவில்லை.

எட்டயபுரம் மருத்துவ மனைக்கு புதிய கட்டடம்

* வினா எண் 417—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எட்டயபுரம் அரசினர் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் புதிய கட்டடம் கட்டும் வேலை எப்பொழுது துவங்கும் ?